18.12.2024 ம.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் முதல் விசாரணை. (ஐ.ஏ.எண்.533/2023 இன் ஒ.எஸ்.எண். 109/2023 )திரு.செல்வராஜ்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1) அ.வ.எண்.294/2004 வழக்கு விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் நான் எத்தனாவது பிரதிவாதி என்றால் நான் எத்தனாவது பிரதிவாதி என்பது ஞாபகமில்லை. அ.வ.எண்.294/2004 ல் இந்த வழக்கின் வாதியின் கணவரான திரு.மனோகருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை இடையூறு செய்யக்கூடாதென்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் பேச்சிமுத்து தேவருக்கு எதிராக மட்டும் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அ.வ.எண்.294/2004 வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அந்த வழக்கில் ஒரு பிரதிவாதியான பேச்சிமுத்து தேவரை தவிர மற்ற பிரதிவாதியான எங்களை நீக்கரவு செய்து மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு பெற்றுக்கொண்டதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை. தாவாச்சொத்து மனோகரன் பெயரில் ஒரு கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் முதலில் மனோகரன் எனது தந்தை சுந்தரராஜனுக்கு எதிராக வழக்கு போட்டியிருந்தார். எனது தந்தை இறந்த பின்னர் என்னை இந்த வழக்கில் வாரீசாக கட்சி சேர்த்தபின்னர் எனக்குத்தெரியும். 10.11.2004 ல் என்னை அந்தவழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) மனோகரன் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தினை ரத்து செய்ததற்கு நான் எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் மனோகனுக்கு கிரையம் கொடுத்த திருமதி.இராஜராஜேஸ்வரியம்மாள் எங்களது வகையறாக்கள் மீது மாண்புமிகு தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.237/1989 ஆக வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில் எங்கள் வகையறாக்கள் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையை இராஜராஜேஸ்வரியம்மாள் பார்த்த பின்பு தனது வழக்கறிஞர் மூலமாக எனக்கும், இந்த சொத்திற்கும் சம்பந்தமில்லை என்று பதில் வழக்குரை தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் நான் அந்த கிரைய ஆவணத்தைபொறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.294/2004 தீர்ப்பின் படி வாதியின் கணவர் மனோகரனுக்கு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது செல்லாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்தீர்ப்பு தடை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது முதல்நிலை நிருபண வாக்குமூலத்தில் எனக்குப்பாத்தியப்பட்ட சொத்து எந்த பக்கம் உள்ளது அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்று சொல்லவில்லை என்றால் எனக்கு அவசியமில்லை என்பதால் சொல்லவில்லை.

3) இந்த வழக்கை முழுமையாக விசாரணை செய்தால் மட்டுமே தாவாச்சொத்து யாருக்குப் பாத்தியப்பட்டதென்று சொல்ல முடியும் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து எனக்குப் பாத்தியப்பட்டது என்பதை நிருபிக்க கிரையப்பத்திரம் தாக்க்ல செய்யவில்லை என்றால் நீதிமன்ற ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனது மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியன் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
18.12.2024.